# மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| H.M.O.P. No. 181/2023 | Date : 30.01.2025 | PW1 |
|---|---|---|
| Name: மணிகண்டன் | S/o. சரவணன் | |
| Evidence Recorded Time: 1.10 P.M. to 1.15 P.M. | | |

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :-** எனக்கு எந்த தேதியில் திருமணம் ஆனது என்றால் 2022ம் வருடத்தில் பங்குனி மாதம் பிறப்பதற்கு இரண்டு நாட்கள் முன்பாக திருமணம் நடந்தது. ஆங்கில மாதம் தேதி நினைவில்லை. நான் எதிர்மனுதாரருடன் எத்தனை வருடங்கள் குடும்பம் நடத்தினேன் என்றால் 3 நாட்கள் குடும்பம் நடத்தினேன். எனக்கும் எதிர்மனுதாரருக்கும் இடையே தாம்பத்திய உறவு ஏற்படவில்லை. எதிர்மனுதாரர் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளார் என்பதற்கு அவரை மனநல மருத்துவர் பரிசோதனை செய்து சான்றிதழ் வழங்கியுள்ளாரா என்றால் அதற்கான சான்று வழங்கவில்லை. மருந்து சீட்டு தாக்கல் செய்துள்ளேன். எதிர்மனுதாரருக்கு எதிராக நான் கூறியுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து தகுந்த ஆவணங்கள் இருந்தால் தான் நிரூபிக்க இயலும் என்றும், நான் கூறும் சாட்சியம் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் மனநிலை பாதிக்கப்பட்டவர் என்பதை நிரூபிக்கும் பொறுப்பு என்னுடையதுதான் என்றும் அதை நிரூபிக்க தவறும் பட்சத்தில் நான் தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

**ஒம்/- மணிகண்டன்**

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/-எல்.கமலகண்ணன்
சார்பு நீதிபதி, மேட்டூர்.